உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சித்தராயமர்ந்த

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறையுள்

மகாதேவமாலை.

இஃது

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[இரண்டாம் பதிப்பு.]

1909.

விலை அணா 1.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

அருட்பெருஞ்சித்தராயமர்ந்த

திருவருட்பிரகாசவள்ளலாரென்னும்

சிதம்பரம்

இராமலிங்க சுவாமிகள்

திருவாய்மலர்ந்தருளிய

திருவருட்பாத் திருமுறையுள்

மகாதேவமாலை.

இஃது

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

[இரண்டாம் பதிப்பு.]

1909.

விலை அணா 1.

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மஹாதேவமாலை.

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்.

கருணைநிறைந் தகம்புறமுந் ததும்பிவழிந் துயிர்க்கெல்லாங்
களைக ணாகித்
தெருணிறைந்த வின்பநிலை வளர்க்கின்ற கண்ணுடையோய்
சிதையா ஞானப்
பொருணிறைந்த மறையமுதம் பொழிகின்ற மலர்வாயோய்
பொய்ய னேன்றன்
மருணிறைந்த மனக்கருங்கற் பாறையுமுட் கசிந்துருக்கும்
வடிவந் தோயே.

எண்சீர்க்கழிநெடிலடி யாசிரியவிருத்தம்.

உலகநிலை முழுதாகி யாங்காங் குள்ள
வுயிராகி யுயிர்க்குயிரா மொளிதா னாகிக்
கலகநிலை யறியாத காட்சி யாகிக்
கதியாகி மெய்ஞ்ஞானக் கண்ண தாகி
யிலகுசிதா காசமதாய்ப் பரமா காச
வியல்பாகி யிணையொன்று மில்லா தாகி
யலகிலறி வானந்த மாகிச் சச்சி
தானந்த மயமாகி யமர்ந்த தேவே. (௧)

உலகமெலாந் தனிநிறைந்த வுண்மை யாகி
யோகியர்தம் மநுபவத்தி னுவப்பா யென்றுங்
கலகமுறு வுபசாந்த நிலைய தாகிக்
களங்கமற்ற வருண்ஞானக் காட்சி யாகி
விலகலுறு நிபிடவா னந்த மாகி
யீதானத் தொளிர்கின்ற விளக்க மாகி
யிலகுபரா பரமாய்ச்சிற் பரமா னந்த
ரிதயமலர் மீதிருந்த வின்பத் தேவே. (௨)

வித்தாகி முளையாகி விளைவ தாகி
விளைவிக்கும் பொருளாகி மேறு மாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோ னாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவி லாத
சத்தாகிச் சித்தாகி யின்ப மாகிச்
சதாநிலையா யெவ்வுயிர்க்குஞ் சாக்ஷி யாகி
முத்தாகி மாணிக்க மாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே. (௩)

வேதாந்த நிலையாகிச் சித்தாந் தத்தின்
மெய்யாகிச் சமரசத்தின் விவேக மாகி
நாதாந்த வெளியாகி முத்தாந் தத்தி
னடுவாகி நவநிலைக்கு நன்றா தாகி
மூதாண்ட கோடியெல்லாந் தாங்கி நின்ற
முதலாகி மனுநீத முத்தி யாகி
வாதாண்ட சமயநெறிக் கமையா தென்று
மௌனவியோ மத்தினிடை வயங்குந் தேவே. (௪)

தோன்றுதுவி தாத்துவித மாய்வி ட்டாத்
துவிதமாய்க் கேவலாத் துவித மாகிச்
சான்றசுத்தாத் துவிதமாய்ச் சுத்தந்தோய்ந்த
சமரசாத்துவித முமாய்த் தன்னை யன்றி
யூன்றுநிலை வேறொன்று மிலதா யென்று
முள்ளதாய் நிரநிசய வுணர்வா யெல்லா
மின்றருளுந் தாயாகித் தந்தை யாகி
யெழிற்குருவாய்த் தெய்வதமா யிலங்குந் தேவே. (௫)

பரமாகிச் சூக்குமமாய்த் தூல மாகிப்
பரமார்த்த நிலையாகிப் பதத்தின் மேலாஞ்
சிரமாகித் திருவருளாம் வெளியா யான்ம
சிற்சத்தி யாய்ப்பசையின் செம்மை யாகித்
திரமாகித் தற்போத நிவிர்த்தி யாகிச்
சிவமாகிச் சிவாநுபவச் செல்வ மாகி
யரமாகி யானந்த போத மாகி
யானந்தா நிதமதா யமர்ந்த தேவே. (௬)

இந்தியமாய்க் கரணாதி யனைத்து மாகி
யியல்புருட னுய்க்கால பாமு மாகிப்
பந்தமற்ற வியோமமாய்ப் பரமா யப்பாற்
பரம்பரமாய் விசுவமுண்ட பான்மை யாகி
வந்தவுப சாந்தமதாய் மௌன மாகி
மகாமௌன நிலையாகி வயங்கா நின்ற
வந்தமிரும் பதமாய்த்தத் பதமா யொன்று
மசிபதமா யதிதமா யமர்ந்த தேவே. (௭)

நின்மயமா யென்மயமா யொன்றுங் காட்டா
　　நிராமயமாய் நிருவிகற்ப நிலையாய் மேலாந்
தன்மயமாய்த் தற்பரமாய் விமல மாகித்
　　தடத்தமாய்ச் சொருபமாய்ச் சகச மாகிச்
சின்மயமாய்ச் சிற்பரமா யசல மாகிச்
　　சிற்சொலித மாயகண்ட சிவமா யெங்கு
மன்மயமாய் வாசகா தீத மாகி
　　மனுதீத மாயமர்ந்த மௌனத் தேவே. (அ)

அளவிறந்த நெடுங்காலஞ் சித்தர் யோக
　　ரறிஞர்மல ரயன்முதலோ ரனந்த வேதங்
களவிறந்துங் காணுதி யிறந்துஞ் செய்யுங்
　　கடந்தவத்துங் காண்பரிதாங் கடவு ளாகி
யுளவிறந்த வெங்போல்வா ருள்ளத் துள்ளே
　　யூறுகின்ற தெள்ளமுத வூற லாகிப்
பிளவிறந்து பிண்டாண்ட முழுதுந் தானாய்ப்
　　பிறங்குகின்ற பெருங்கருணைப் பெரிய தேவே. (௯)

வாயாகி வாயிறந்த மௌன மாகி
　　மதமாகி மதங்கடந்த வாய்மை யாகிக்
காயாகிப் பழமாகித் தருவாய் மற்றைக்
　　கருவிகா ரணதிகளின் கலப்பாய்ப் பெற்ற
தாயாகித் தந்தையாய்ப் பிள்ளை யாகித்
　　தானாகி நானாகிச் சகல மாகி
யோயாத சத்தியெலா முடைய தாகி
　　யொன்றாகிப் பலவாகி யோங்குந் தேவே. (௧௦)

அண்டங்கள் பலவாகி யவற்றின் மேலு
　　மளவாகி யளவாத வதீத மாகிப்
பிண்டங்க ளனந்தவகை யாகிப் பிண்டம்
　　பிறங்குகின்ற பொருளாகிப் பேதந் தோற்றும்
பண்டங்கள் பலவாகி யிவற்றைக் காக்கும்
　　பதியாகி யானந்தம் பழுத்துச் சாந்தங்
கொண்டெங்கு நிழல் பரப்பித் தழைத்தஞானக்
　　கொழுங்கடவுட் டருவாகிக் குலவுந் தேவே. (௧௧)

பொன்னாகி மணியாகிப் போக மாகிப்
　　புறமாகி யகமாகிப் புனித மாகி
மன்னாகி மலையாகிக் கடலு மாகி
　　மதியாகி ரவியாகி மற்று மாகி
முன்னாகிப் பின்னாகி நடுவு மாகி
　　முழுதாகி நாதமுற முழங்கி யெங்கு
மின்னாகிப் பரவியின்ப வெள்ளந் தேக்க
　　வியன்கருணைப் பொழிமுகிலாய் விளங்குந் தேவே. (௧௨)

அரிதாகி யரியதினு மரிய தாகி
யநாதியா யாதியா யருள தாகிப்
பெரிதாகிப் பெரியதினும் பெரிய தாகிப்
பேதமா யபேதமாய்ப் பிறங்கா நின்ற
கரிதாகி வெளிதாகிக் கலைக ளாகிக்
கலைகடந்த பொருளாகிக் காணு நீதத்
தெரிதான வெளிகெளி லருளாம் வண்மைச்
செழுங்கிரணச் சுடராகித் திகழுந் தேவே. (கஉ)

உருவாகி யுருவினிலுள் ளுருவ மாகி
யுருவத்தி லுருவாகி யுருவுள் ளொன்று
யருவாகி யருவினிலுள் ளருவ மாகி
யருவத்தி லருவாகி யருவுள் ளொன்றாய்க்
குருவாகிச் சத்துவசிற் குணத்த தாகிக்
குணாதிதப் பொருளாகிக் குலவா நின்ற
மருவாகி மலராகி வல்லி யாகி
மகத்துவமா யணுத்துவமாய் வயங்குந் தேவே. (கங)

சகலமாய்க் கேவலமாய்ச் சுத்த மாகிச்
சராசரமா யல்லவாய்த் தானே தானு
யகலமாய்க் குறுக்கமாய் நெடுமை யாகி
யவையனைத்து மணுகாத வசல மாகி
யிகலுறுந் துணையாகித் தனிய தாகி
யெண்குணமா யெண்குணத்தெம் மிறையா மென்று
முகலிலாத் தண்ணருள்கொண் டியிரை யெல்லா
மூட்டிவளர்த் திடுங்கருணை யோவாத் தேவே. (கச)

வாசகமாய் வாச்சியமாய் நவோ யந்த
வாசகவாச் சியங்கடந்த மௌன மாகித்
தேசகமா யிருளகமா யிரண்டுங் காட்டாச்
சித்தகமாய் வித்தகமாய்ச் சிறிதும் பந்த
பாசமுறாப் பதியாகிப் பசுவு மாகிப்
பாசமிலை யாகியொன்றும் பகரா தாகி
நாசமிலா வெளியாகி யொளிதா னாகி
நாதாந்த முடிவினடு நவிற்றுந் தேவே. (கரு)

ஈசமாகிச் சேவுை யீச னாகிச்
சதுமுகனுந் திருமாலா யரன்று னாகி
மாமாயை முதலாய்க்கூ டத்த னாகி
வான்பிரம மாகியல்லா வழக்கு மாகி
நீஞ்மாகிப் பரமாகிச் சமய கோடி
யெத்தனையு மாகியவை யெட்டா வான்கற்
பதமாகிப் பரமாகிப் பரம மாகிப்
பராபரமாய்ப் பரம்பரமாய்ப் பதியுந் தேவே. (கசு)

விதியாகி யரியாகிக் கிரீச னாகி
விளங்குமகேச் சுரனாகி விமல மான
நிதியாகுஞ் சதாசிவனாய் விந்து வாகி
நிகழ்நாத மாய்ப்பரையாய் நிமலா னந்தப்
பதியாகும் பரசிவமாய்ப் பரமாய் மேலாய்ப்
பக்கமிரண் டாயிரண்டும் பகரா தாகிச்
சதியாகி யளவிறந்த சதிக ளெல்லாங்
கடந்துநின்று நிறைந்தபெருங் கருணைத் தேவே. (௧௮)

மானாகி மோகினியாய் விந்து வாகி
மற்றவையாற் காணாத வான மாகி
நானாகி நானல்ல னாகி நானே
நானாகும் பதமாகி நான்றான் கண்ட
தானாகித் தானல்ல னாகித் தானே
தானாகும் பதமாகிச் சகச ஞான
வானாகி வானடுவில் வயங்கு கின்ற
மௌனநிலை யாகியெங்கும் வளருந் தேவே. (௧௯)

மந்திரமாய்ப் பதமாகி வன்ன மாகி
வளர்கலையாய்த் தத்துவமாய்ப் புவன மாகிச்
சந்திரனா யிந்திரனா யிரவி யாகித்
தானவராய் வானவராய்த் தயங்கா நின்ற
தந்திரமா யிவையொன்று மல்ல வாகித்
தானாகித் தனதாகித் தானன் காட்டா
வந்த மா பப்பாலா யதற்கப் பாலா
யப்பாலுக் கப்பாலா யமர்ந்த தேவே. (௨௦)

மலைமேலுங் கடன்மேலு மலரின் மேலும்
வாழ்கின்ற மூவுருவின் வயங்குங் கோவே
நிலைமேலு நெறிமேலு நிறுத்து கின்ற
நெடுந்தவத்தோர் நிறைமேலு நிகழ்த்தும் வேதக்
கலைமேலு மெம்போல்வா ருளத்தின் மேலுங்
கண்மேலுந் தோண்மேலுங் கருத்தின் மேலுந்
தலைமேலு முயிர்மேலு முணர்வின் மேலுந்
தருமன்பின் மேலும்வளர் தாண்மெய்த் தேவே. (௨௧)

பொற்குன்றே யகம்புறமும் பொலிந்து நின்ற
பூரணமே யாரணத்துட் பொருளே யென்றுங்
கற்கின்றோர்க் கினியசுவைக் கரும்பே தான
கற்பகமே கற்பகத்தின் கனியே வாய்மைச்
சொற்குன்றா நாவகத்துண் மாறா வின்பந்
தோற்றுகின்ற திருவருட்சீர்ச் சோதி யேவிண்
ணிற்கின்ற சுடரேயச் சுடருள் ளோங்கு
நீளொளியே யவ்வொளிக்கு ணிறைந்த தேவே. (௨௨)

தேசுவிரித் திருளகற்றி யென்று மோங்கித்
திகழ்கின்ற செழுங்கதிரே செறிந்த வாழ்க்கை
மாசுவிரித் திடுமனத்திற் பயிலாத் தெய்வ
மணிவிளக்கே யானந்த வாழ்வே யெங்குங்
காசுவிரித் திடுமொளிபோற் கலந்து நின்ற
காரணமே சாந்தமெனக் கருதா நின்ற
தூசுவிரித் துடுக்கின்றோர் தம்மை நீங்காச்
சுகமயமே யருட்கருணை துலங்குந் தேவே. (௨௩)

கோவேயென் குணக்குன்றே குன்றா ஞானக்
கொழுந்தேனே செழும்பாகே குளிர்ந்த மோனக்
காவேமெய் யறிவின்ப மயமே யென்றன்
கண்ணேமுக் கண்கொண்ட கரும்பே வானத்
தேவேயத் தேவுக்குந் தெளிய வொண்ணாத்
தெய்வமே வாடாமற் றிகழ்சிற் போதப்
பூவேயப் பூவினறு மணமே யெங்கும்
பூரணமாய் நிறைந்தருளும் புனிதத் தேவே. (௨௪)

வானேயவ் வானுலவுங் காற்றே காற்றின்
வருநெருப்பே நெருப்புதநீர் வடிவே நீரிற்
றானேயும் புவியேயப் புவியிற் றங்குந்
தாபரமே சங்கமமே சாற்றுகின்ற
வூனேநல் லுயிரேயுள் ளொளியே யுள்ளத்
துணர்வேயவ் வுணர்வுகலந் தூறு கின்ற
தேனேமுக் கனியேசெங் கரும்பே பாகின்
தீஞ்சுவையே சுவையனைத்துந் திரண்ட தேவே. (௨௫)

விண்ணேவின் னுருவேவின் முதலே விண்ணுள்
வெளியேயவ் வெளிவிளங்கு வெளியே யென்றன்
கண்ணேகண் மணியேகண் ணொளியே கண்ணுட்
கலந்துநின்ற கதிரேயக் கதிரின் வித்தே
தண்ணேதண் மதியேயம் மதியிற் பூத்த
தண்ணமுதே தண்ணமுத சாரமேசொற்
பண்ணேபண் ணிசையேபண் மயமே பண்ணின்
பயனேமெய்த் தவர்வாழ்த்திப் பரவுந் தேவே. (௨௬)

மாணேயத் தவருளத்தே மலர்ந்த செந்தா
மரைமலரின் வயங்குகின்ற மணியே ஞானப்
பூணேமெய்ப் பொருளேயற் புதமே மோனப்
புத்தமுதே யானந்தம் பொலிந்த பொற்பே
யாணேபெண் ணுருவமே யலியே யொன்று
மல்லாத பேரொளியே யனைத்துந் தாங்குந்
தூணேசிற் சுகமேயச் சுகமேற் பொங்குஞ்
சொரூபானந் தக்கடலே சோதித் தேவே. (௨௭)

பூதமே யவைதோன்றிப் புகுந்தொடுங்கும்
புலவிடமே யிடம்புரிந்த பொருளே போற்றும்
வேதமே வேதத்தின் விளைவே வேத
வியன்முடிவே யம்முடிவின் விளங்குங் கோவே
நாதமே நாதாந்த நடமே யந்த
நடத்தினையுண் ணடத்துகின்ற நலமே ஞான
போதமே போதமெலாங் கடந்து நின்ற
பூரணமே யோகியருட் பொலிந்த தேவே. (௨௮)

ஞாலமே ஞாலமெலாம் விளங்க வைத்த
நாயகமே சற்பமுத னவிலா நின்ற
காலமே காலமெலாங் கடந்த ஞானக்
கதியேமெய்க் கதியளிக்குங் கடவுளே சிற்
சோலமே குணமேயுட் குறியே கோலங்
குணங்குறிகள் கடந்துநின்ற குருவே யன்பர்
சீலமே மாலறியா மனத்திற் கண்ட
செம்பொருளே யும்பர்பதஞ் செழிக்குந் தேவே. (௨௯)

தத்துவமே தத்துவா தீதமே சிற்
சயம்புவே யெங்குநிறை சாக்ஷியே மெய்ச்
சத்துவமே சத்துவத்தின் பயனே யின்பந்
தந்தருளும் பெருவாழ்வாஞ் சாமியேயெஞ்
சித்தநிலை தெளிவிக்கு மொளியே சற்றுந்
தெவிட்டாத தெள்ளமுதே தேனே யென்றுஞ்
சுத்தநெறி திறம்பாதா ரறிவிற் றோய்ந்த
சுகப்பொருளே மெய்ஞ்ஞானந் துலங்குந் தேவே. (௩௦)

யோகமே யோகத்தின் பயனே யோகத்
தொருமுதலே யோகத்தி னோங்குந் தூய
போகமே போகத்தின் பொலிவே போகம்
புரிந்தருளும் புண்ணியமே புனித ஞான
யாகமே யாகத்தின் விளைவே யாகத்
திறையேயவ் விறைபுரியு மின்பே யன்பர்
மோகமே மோகமெலா மழித்து வீறு
மோனமே மோனத்தின் முளைத்த தேவே. (௩௧)

காட்சியே காண்பதுவே ஞேய மேயுட்
கண்ணுடையார் கண்ணிறைந்த களிப்பே யோங்கு
மாட்சியே யுண்மையறி வின்ப மென்ன
வயங்குகின்ற வாழ்வேமா மௌனக் காணி
யாட்சியே யாட்சிசெயு மாசே சுத்த
வறிவேமெய் யன்பேதெள் ளமுதே நல்ல
சூட்சியே சூட்சியெலாங் கடந்து நின்ற
துரியமே துரியமுடிச் சோதித்தேவே. (௩௨)

மறைமுடிக்குப் பொருந்தமுறு மணியே ஞான
வாரிதியே யன்பர்கடம் மனத்தே நின்ற
குறைமுடிக்குங் குணக்குன்றே குன்றா மோனக்
கோமானே தூயசிவக் கொழுந்தே வெள்ளைப்
பிறைமுடிக்கும் பெருமானே துளவமாலைப்
பெம்மானே செங்கமலப் பிரானே யிந்த
விறைமுடிக்கு மூவர்கட்கு மேலாய் நின்ற
விறையேயிவ் வுருவுமின்றி யிருந்த தேவே. (கங)

நாதகன்ற யோகர்மனக் குகையில் வாழுங்
குருவேசன் முகங்கொண்ட கோவே வஞ்ச
வாதகன்ற ஞானியர்தம் மதியி லூறும்
வானமுதே யானந்த மழையே மாயை
வேதகன்ற முத்தர்களை விழுங்கு ஞான
வேழமே மெய்யின்ப விருந்தே நெஞ்சிற்
தீதகன்ற மெய்யடியர் தமக்கு வாய்த்த
செல்வமே யெல்லையிலாச் சீர்மைத் தேவே. (கச)

அருளருவி வழிந்துவழிந் தொழுக வோங்கு
மானந்தத் தனிமலையே யமலவேதப்
பொருளளவு நிறைந்தவற்றின் மேலு மோங்கிப்
பொலிகின்ற பரம்பொருளே பூரண மாகி
யிருளகற்றும் பிரகாச மயமாஞ் சுத்த
வேகாந்தப் பெருவெளிக்கு ளிருந்த வாழ்வே
தெருளளவு முளமுழுதுங் கலந்து கொண்டு
தித்திக்குஞ் செழுந்தேனே தேவ தேவே. (கரு)

அளவையெலாங் கடந்துமனங் கடந்து மற்றை
யறிவையெலாங் கடந்துகடந் தமல யோக
வுளவையெலாங் கடந்துபதங் கடந்து மேலைப்
பொருளுகடந் திரண்டுகடந் துணரச் சூழ்ந்த
ளளவையெலாங் கடந்தண்ட பிண்ட மெல்லாங்
கடந்துநிறை வானசுகக் கடலே யன்பர்
வளவையெலா மிருளகற்று மொளியே மோன
வாழ்வேயென் னுயிர்க்குயிராய் வதியுந் தேவே. (கசு)

வன்புகலந் தறியாத மனத்தோர் தங்கண்
மனங்கலந்து மதிகலந்து வயங்கா நின்ற
வென்புகலந் தூன்கலந்து புலன்க ளோடு
மிந்திரிய மவைகலந்து ளியங்கு கின்ற
வன்புகலந் தறிவுகலந் துயிரைம் பூத
மான்மாவுங் கலந்துகலந் தண்ணித் தூறி
யின்புகலந் தருள்கலந்து ததும்பிப் பொங்கி
யெழுங்கருணைப் பெருக்காறே யின்பத் தேவே. (கஎ)

தண்ணமுத மதிகுளிர்ந்த கிரணம் வீசத்
தடம்பொழிற்பூ மணம்வீசத் தென்றல் வீச
வெண்ணமுதப் பனிக்குளிலா முற்றத் தேயின்
மிசைவீசத் தண்பனிநீ ரெடுத்து வீசப்
பெண்ணமுத மனையவர்வின் னமுத மூட்டப்
பெறுகின்ற சுகமனைத்தும் பிற்பட் டோடக்
கண்ணமுதத் துடம்புயிர்மற் றனைத்து மின்பங்
கலந்துகொளத் தருங்கருணைக் கடவுட் டேவே. (௧௮)

சுழியாத வருட்கருணைப் பெருக்கே யென்றுந்
தூண்டாத மணிவிளக்கின் சோதி யேவா
னொழியாது கதிர்பரப்புஞ் சுடரே யன்பர்க்
கோவாத வின்பருளு மொன்றே விண்ணோர்
விழியாலு மொழியாலு மனத்தி னாலும்
விழைதருமெய்த் தவத்தாலும் விளம்பு மேந்த
வழியாலுங் கண்டுகொளற் கரிதாய்ச் சுத்த
மௌனவெளி யூடிருந்து வயங்குந் தேவே. (௧௯)

சொல்லொழியப் பொருளொழியக் கரண மெல்லாஞ்
சோர்ந்தொழிய வுணர்வொழியத் துளங்கா நின்ற
வல்லொழியப் பகலொழிய நடுவே நின்ற
வானந்த வநுபவமே யதீத வாழ்வே
நெல்லொழியப் பதர்கொள்வார் போல வின்ப
நிறைவொழியக் குறைகொண்மத நெறியோர் நெஞ்சக்
கல்லொழிய மெய்யடிய ரிதய மெல்லாங்
கலந்துகலந் தினிக்கின்ற கருணைத் தேவே. (௨௰)

அலைகடலும் புவிவரையு மனல்கா லிரு
மந்தரமு மற்றுறையகி லாண்டம் யாவு
நிலைகுலையா வண்ணமருள் வெளியி னூடு
நிரைநிரையா நிறுத்தியுயிர் நிகழும் வண்ணந்
தலைகுலையாத் தத்துவஞ்செய் திரோதை யென்னுந்
தனியாணை நடத்தியருட் டலத்தி லென்று
மலைவறவீற் றிருந்தருளு மரசே முத்தி
வழித்துணையே விழித்துணையுண் மணியாந் தேவே. (௨௧)

வரம்பழுத்த நெறியேமெய்ந் நெறியி லின்ப
வளம்பழுத்த பெருவாழ்வே வானோர் தங்கள்
சிரம்பழுத்த பதப்பொருளே யறிவா னந்த
சிவம்பழுத்த வநுபவமே சிதாகா சத்திற்
பரம்பழுத்த நடத்தரசே கருணை யென்னும்
பழம்பழுத்த வான்றருவே பரம ஞானத்
திரம்பழுத்த யோகியர்தம் யோகத் துள்ளே
திளம்பழுத்துக் கனிந்தவருட் செல்வத் தேவே. (௨௨)

அண்டமெலாங் கண்ணாகக் கொளினுங் காண்டற்
கருத்துணையுங் கூடாவென் றனந்த வேதம்
விண்டலறி யோலமிட்டுப் புலம்ப மோன
வெளிக்குள்வெளி யாய்நிறைந்து விளங்கு மொன்றே
கண்டவடி வாய்கண்ட மயமா யெங்குங்
கலந்துநின்ற பெருங்கருணைக் கடவு ளேயெஞ்
சண்டவினைத் தொடக்கறச்சின் மயத்தைக் காட்டுஞ்
சற்குருவே சிவகுருவே சாந்தத் தேவே. (௪௩.)

பேதமுறு மெய்ப்போத வடிவ மாகிப்
பெருங்கருணை நிறம்பழுத்துச் சாந்தம் பொங்கிச்
சிதமிகுந் தருள்கனிந்து கனிந்து மாறாச்
சின்மயமாய் நின்மலமே மணந்து நீங்கா
வாதரவோ டியன்மௌனச் சுவைமேன் மேற்கொண்
டானந்த ரசமொழுக்கி யன்பா லென்றுஞ்
சேதமுறா தடியருளத் தித்தித் தோங்குஞ்
செழும்புனிதக் கொழுங்கனியே தேவ தேவே. (௪௪)

உடல்குளிர வுயிர்தழைக்க வுணர்ச்சியோங்க
வளங்கனிய மெய்யன்ப ருள்ளத் தூடே
கடலனைய பேரின்பத் ததும்ப நாளுங்
கருணைமலர்த் தேன்பொழியுங் கடவுட் காவே
வீடலரிய வெம்போல்வா ரிதயஞ் சோரும்
வேதாந்த மருந்தனைத்தம் விருந்தே வேதந்
தொடலரிய வெளிமுழுதும் பரவி ஞானச்
சோதிவிரித் தொளிர்கின்ற சோதித் தேவே. (௪௫)

கிரியைநெறி யகற்றிமறை முடிவி னின்று
கேளாமற் கேட்கின்ற கேள்வி யேசொற்
கரியவறை விடுத்தநவ நிலைக்கு மேலே
காணாமற் காண்கின்ற காட்சி யேயுள்
ளரியநிலை யொன்றிரண்டி லாதேவ சற்று
மறியாம லறிகின்ற வறிவே யென்று
முரியசதா நிலைநின்ற வுணர்ச்சி மேலோ
ருன்னும வுன்னுகின்ற வொளியாந் தேவே. (௪௬)

சொற்போதங் கரும்பெரிய மறைக ளோடித்
தொடர்ந்துதொடர்ந் தயர்ந்திளைத்துத் துளங்கி யேங்கிப்
பிற்போத விரைந்தன்ப ருளத்தே சென்ற
பெருங்கருணைப் பெருவாழ்வே பெயரா தென்றுந்
தற்போத வொழிவினிடை நிறைந்து பொங்கித்
ததும்பிவழிந் தோங்கியெல்லாந் தானே யாகிச்
சிற்போதத் தகம்புறமுங் கொத்து நின்ற
சிவானந்தப் பெருக்கேமெய்ச் செல்வத் தேவே. (௪௭)

பொங்குபல சமயமெனு நதிக ளெல்லாம்
புகுந்துகலந் திடநிறைவாய்ப் பொங்கி யோங்குங்
கங்குகரை காணாத கடலே யெங்குங்
கண்ணாகக் காண்கின்ற கதியே யன்பர்
தங்குநிழல் பரப்பிமயற் சோடை யெல்லாந்
தணிக்கின்ற தருவேபூந் தடமே ஞானச்
செங்குமுத மலரவரு மதியே யெல்லாஞ்
செய்யவல்ல கடவுளே தேவ தேவே. (௫௮)

வான்காணா மறைகாணா மலரோன் காணான்
மால்காணா னுருத்திரனு மதித்துக் காணா
னென்காணு மிடத்ததனைக் காண்பே மென்று
நல்லோர்க ளவில்கின்ற நலமே வேட்கை
மான்காணா வுளக்கமல மலர்த்தா நின்ற
வான்சுடரே யானந்த மயமே யீன்ற
வான்காணா விளங்கன்றா யலமந் தேங்கு
மன்பர்தமைக் கலந்துகொளு மமலத் தேவே. (௫௯)

மெய்ஞ்ஞான விருப்பத்தி லேறிக் கேள்வி
மீதேறித் தெளிந்திச்சை விடுத லேறி
யஞ்ஞான மற்றபடி யேறி யுண்மை
யறிந்தபடி நிலையேறி யதுநா னென்னுங்
கைஞ்ஞானங் கழன்றேறி மற்ற வெல்லாங்
கடந்தேறி மௌனவியற் கதியி லேறி
யெஞ்ஞான மறத்தெளிந்தோர் கண்டுங் காணே
மென்கின்ற வநுபவமே யின்பத் தேவே. (௬௦)

பற்றறியா முத்தர்தமை யெல்லாம் வாழைப்
பழம்போல விழுங்குகின்ற பரமே மாசு
பெற்றறியாப் பெரும்பதமே பதத்தைக் காட்டும்
பெருமானே யானந்தப் பேற்றின் வாழ்வே
யுற்றறியா தின்னுமின்னு மறைக ளெல்லா
மோலமிட்டுத் தேடுகின்ற வொன்றே யொன்றுங்
கற்றறியாப் பேதையேன் றனக்கு மின்பங்
கனிந்தளித்த வருட்கடலே கருணைத் தேவே. (௬௧)

மெய்யுணர்ந்த வாதவூர் மலையைச் சுத்த
வெளியாக்கிக் கலந்துகொண்ட வெளியே முற்றும்
பொய்யுணர்ந்த வெமைப்போல்வார் தமக்கு மின்பம்
புரிந்தருளுங் கருணைவெள்ளப் பொற்பே யன்பர்
கையுறைந்த வளர்நெல்லிக் கனியே யுள்ளங்
கரைந்துகரைந் துருகவவர் கருத்தி னூடே
யுய்யுநெறி யொளிகாட்டி வெளியு முள்ளு
மோங்குகின்ற சுயஞ்சுடரே யுண்மைத் தேவே. (௬௨)

ஒலிவடிவு நிறைந்தசுவைக ளுற்ற முற்ற
முறுதொழில்கள் பயன்பலவே றளவா யெங்கு
மலிவகையா லெவ்வகையு மொன்று மொன்று
மாட்டாதா யெல்லாமும் வல்ல தாகிச்
சலிவகையில் லாதமுதற் பொருளே யெல்லாந்
தன்மயமாய் விளங்குகின்ற தனியே யாண்பெண்
ணலிவகையல் லாதவகை கடந்து நின்ற
வருட்சிவமே சிவபோகத் தமைந்த தேவே. (௩௩)

பேராய வண்டங்கள் பலவும் பிண்ட
பேதங்கள் பற்பலவும் பிண்டாண் டத்தின்
வாராய பலபொருளுங் கடலு மண்ணு
மலையுளவுங் கடலுளவு மணலும் வானு
மூறாத வான்மீனு மனுவு மற்றை
யுள்ளனவு மளந்திடலா மோகோ வுன்னை
யாராலு மளப்பரிதென் றனந்த வேத
மறைந்திலக்க வறிதார மாகுந் தேவே. (௩௪)

கற்பங்கள் பலகோடி செல்லத் தீய
கனலினடு வூசியின்மேற் காலே யூன்றிப்
பொற்பறமெய் யுணவின்றி யுறக்க மின்றிப்
புலர்ந்தெலும்பு புலப்படவைம் பொறியை யோம்பி
நிற்பவருக் கொளித்துமறைக் கொளித்தி யோக
நீண்முனிவர்க் கொளித்தமரர்க் கொளித்து மேலாஞ்
சிற்பதத்திற் சின்மயமாய் நிறைந்து ஞானத்
திருவாள ருட்கலந்த தேவ தேவே. (௩௫)

மட்டகன்ற நெடுங்கால மனத்தால் வாக்கான்
மதித்திடினும் புலம்பிடினும் வாரா தென்றே
கட்டகன்ற மெய்யறிவோர் காண நீக்கிக்
கலையகற்றிக் கருவியெலாங் கழற்றி மாயை
விட்டகன்று கருமமல போதம் யாவும்
விடுத்தொழித்துச் சகசமல வீக்க நீக்கிச்
சுட்டகன்று நிற்கவவர் தம்மை முற்றுஞ்
சூழ்ந்தகலந் திடுஞ்சிவமே துரியத் தேவே. (௩௬)

உருநான்கு மருநான்கு நடுவே நின்ற
வுருவருவ மொன்றுமிவை யுடன்மே லுற்ற
வொருநான்கு மிவைகடந்த வொன்று மாயவ்
வொன்றினடு வாய்நடுவு ளொன்றாய் நின்றே
யிருநான்கு மமைந்தவரை நான்கி னேடு
மெண்ணான்கின் மேலிருந்து மிறையே மாயைக்
கருநான்கும் பொருணான்குங் காட்டு முக்கட்
கடவுளே கடவுளர்கள் கருதுந் தேவே. (௩௭)

பாங்குளதாந் தெரிதுமெனத் துணிந்து கோடிப்
பழமறைக டனித்தனியே பாடிப் பாடி
யிங்குளதென் றங்குளதென் றோடி யோடி
யிளைத்திளைத்துத் தொடர்ந்துதொடர்ந் தேட்டுந்தோறும்
வாங்குபர வெளிமுழுது நீண்டு நீண்டு
மறைந்துமறைந் தொளிகின்ற மணியே யெங்குந்
தேங்குபர மானந்த வெள்ள மேசச்
சிதானந்த வருட்சிவமே தேவ தேவே. (௬அ)

எழுத்தறிந்து தமையுணர்ந்த யோக ருள்ளத்
தியலறிவாந் தருவினிலன் பெனுமோ ருச்சி
பழுத்தளிந்து பௌனநறுஞ் சுவைமேற் பொங்கிப்
பதம்பொருந்த வநுபவிக்கும் பழமே மாயைக்
கழுத்தரிந்து கருமமலத் தலையை வீசுங்
கடுந்தொழிலோர் தமக்கேநற் கருணை காட்டி
விழுத்துணையா யமர்ந்தருளும் பொருளே மோன
வெளியினிறை யானந்த விளைவாந் தேவே. (௬௯)

உருத்திரர்நா ரணர்பிரமர் விண்ணோர் வேந்த
ருறுகருடர் காந்தருவ ரியக்கர் பூதர்
மருத்துவர்யோ கியர்சித்தர் முனிவர் மற்றை
வானவர்கண் முதலோர்தம் மனத்தாற் றேடிக்
கருத்தழிந்து தனித்தனியே சென்று வேதங்
களைவினவ மற்றவையுங் காணே மென்று
வருத்தமுற்றுங் கவரோடு புலம்ப நின்ற
வஞ்சவெளி யேயின்ப மயமாந் தேவே. (௭௦)

பாயிரமா மறையனந்த மனந்த மின்னும்
பார்த்தளந்து காண்டுமெனப் பல்கால் மேவி
யாயிரமா யிரமுகங்க ளாலும் பன்னா
ளளந்தளந்தோ ரணுத்துணையு மளவு காணா
தேயிரங்கி யழுதசிவ சிவவென் றேங்கித்
திரும்பவருட் பரவெளிவாழ் சிவமே யின்ற
தாயிரங்கி வளர்ப்பதுபோ லெம்போல் வாரைத்
தண்ணருளால் வளர்த்தென்றுந் தாங்குந் தேவே. (௭௧)

அந்தரமிங் கறிவோமற் றதனி லண்ட
மடுக்காய மைந்தவுமீ வறிவோ மாங்கே
யுந்துறும்பல் பிண்டமிவை யறிவோஞ் சிவ
னுற்றிலை யறிவோமற் றணைத்து நாட்டு
மெந்தையின தருள்விளையாட் டந்தோ வந்தோ
வெள்ளளவு மறிந்திலோ மென்னே யென்று
முந்தனந்த மறைகளெலாம் வழுத்த நின்ற
முழுமுதலே யன்பர்குறை முடிக்குந் தேவே. (௭௨)

தோன்றுபர சாக்கிரமுங் கண்டோ மந்தச்
சொப்பனமுங் கண்டோமேற் சுழுத்தி கண்டோ
மான்றபர துரியநிலை கண்டோ மப்பா
லதுகண்டோ மப்பாலா மதுவுங் கண்டோ
மென்றவுப சாந்தநிலை கண்டோ மப்பா
லிருந்தநினைக் காண்கிலோ மென்னே யென்று
சான்றவுப நிடங்களெலாம் வழுத்த நின்ற
தன்மயமே சின்மயமே சகசத் தேவே. (௫௬)

பரிக்கிரக நிலைமுழுதுந் தொடர்ந்தோ மேலைப்
பாவிந்து நிலையனைத்தும் பார்த்தோம் பாச
மெரிக்குமியற் பரநாத நிலைக்கண் மெல்ல
வெய்தினோ மப்பாலு மெட்டிப் போனோந்
தெரிக்கரிய வெளிமூன்றுந் தெரிந்தோ மெங்குஞ்
சிவமேநின் சின்மயமோர் சிறிதுந் தேரோந்
தரிக்கரிதென் றுகமங்க ளெல்லாம் போற்றத்
தனிநின்ற பரம்பொருளே சாந்தத் தேவே. (௫௭)

மணக்குமலர்த் தேனுண்ட வண்டே போல
வளர்பரமா னந்தமுண்டு மகிழ்ந்தோ மெல்லா
மிணக்கமுறக் கலந்துகலந் ததித மாதற்
கியற்கைநிலை யாததுதா னெம்மாற் கூறுங்
கணக்குவழக் கனைத்தினையுங் கடந்த தந்தோ
காண்பரிதிங் கெவர்க்குமெனக் கலைக ளெல்லாம்
பிணக்கறநின் றோலமிடத் தனித்து நின்ற
பெரும்பதமே மதாதீதப் பெரிய தேவே. (௫௮)

பொதுவென்றும் பொதுவினடம் புரியா நின்ற
பூரணசிற் சிவமென்றும் போதா னந்த
மதுவென்றும் பிரமமென்றும் பரமமென்றும்
வகுக்கின்றோர் வகுத்திடுக வதுதா னென்று
மிதுவென்றுஞ் சுட்டவொண்ணா ததனாற் சும்மா
விருப்பதுவே துணிவெனக்கொண் டிருக்கின் றோரை
விதுவென்ற தன்னொளியாற் கலந்து கொண்டு
விளங்குகின்ற பெருவெளியே விமலத் தேவே. (௫௯)

அருமறையா கமங்கண்முத னடுவீ றெல்லா
மமைந்தமைந்து மற்றவைக்கு மப்பா லாகிக்
கருமறைந்த வுயிர்கடொறுங் கலந்து மேவிக்
கலவாமற் பன்னெறியுங் கடந்து ஞானத்
திருமணிமன் றகத்தின்ப வுருவா யென்றுந்
திகழ்கருணை நடம்புரியுஞ் சிவமே மோனப்
பெருமலையே பரமவின்ப நிலையே முக்கட்
பெருமானே யெத்திறத்தும் பெரிய தேவே. (௬௰)

என்னுயிர்நீ யென்னுயிர்க்கோ ருயிரு நீயென்
னின்னுயிர்க்குத் துணைவனீ யென்னை யீன்ற
வன்னைநீ யென்னுடைய வப்ப னீயென்
னரும்பொருளீ யென்னிதயத் தன்பு நீயென்
னன்னெறிநீ யெனக்குரிய வுறவு நீயென்
னற்குருநீ யெனைக்கலந்த நட்பு நீயென்
றன்னுடைய வாழ்வுநீ யென்னைக் காக்குந்
தலைவனீ கண்மூன்று தழைத்த தேவே. (சுஅ)

தானாகித் தானல்ல தொன்று மில்லாத்
தன்மையனா யெவ்வெவைக்குந் தலைவ னாகி
வானாகி வளியனலாய் நீரு மாகி
மலர்தலைய வுலகாகி மற்று மாகித்
தேனாகித் தேனினறுஞ் சுவைய தாகித்
தீஞ்சுவையின் பயனாகித் தேடு கின்ற
நானாகி யென்னிறையாய் நின்றாய் நின்னை
நாயடியே னெவ்வாறு நவிற்று மாறே. (சுகூ)

ஆனேறும் பெருமானே யரசே யென்ற
னாருயிருக் கொருதுணையே யமுதே கொன்றைத்
தேனேறு மலர்ச்சடையெஞ் சிவனே தில்லைச்
செழுஞ்சுடரே யானந்தத் தெய்வ மேயென்
னூனேறு முயிர்க்குணிறை யொளியே யெல்லா
முடையானே நின்னடிச்சீ ருன்னி யன்பர்
வானேறு கின்றார்நா னொருவன் பாவி
மண்ணேறி மயக்கேறி வருந்துற் றேனே. (எ0)

செஞ்சடையெம் பெருமானே சிறுமா னேற்ற
செழுங்கமலக் கரத்தவனே சிவனே சூழ்ந்து
மஞ்சடையு மதிற்றில்லை மணியே யொற்றி
வளர்மருந்தே யென்னுடைய வாழ்வே வேட்கை
யஞ்சடைய வஞ்சியர்மா லடைய வஞ்ச
மடையநெடுந் துயரடைய வகன்ற பாவி
நெஞ்சடைய நினைதியோ நினைதி யேன்மெய்ந்
நெறியுடையார் நெஞ்சமர்ந்த நீத னன்றே. (எக)

அன்னையினும் பெரிதினிய கருணை யூட்டு
மாரமுதே யென்னுறவே யரசே யிந்த
மன்னுலகி லடியேனை யென்னே துன்ப
வலையிலகப் படவியற்றி மறைந்தா யந்தோ
பொன்னைமதித் திடுகின்றோர் மருங்கே சூழ்ந்து
போனகமும் பொய்யுறவும் பொருந்த லாற்றே
னென்னையுளங் கொள்ளுதியோ கொள்கி லாயோ
வென்செய்வே னென்செய்வே னென்செய் வேனே. (எஉ)

படித்தேன்பொய் யுலகியனூ லெந்தாய் நீயே
படிப்பித்தா யன்றியுமப் படிப்பி விச்சை
யொடித்தேனா னொடித்தேனோ வொடிப்பித் தாய்பின்
னுன்னடியே துணையெனநா னுறுதி யாகப்
பிடித்தேன்மற் றதுவுநீ பிடிப்பித் தாயிப்
பேதையே னின்னருளைப் பெற்றோர் போல
நடித்தேனெம் பெருமானீ தொன்று மானே
நடித்தேனோ வல்லதுநீ நடிப்பித் தாயோ. (௭௧)

மத்தேறி யலைதயிர்போல் வஞ்ச வாழ்க்கை
மயலேறி விருப்பேறி மதத்தி னோடு
பித்தேறி யுழல்கின்ற மனத்தா லந்தோ
பேயேறி நலிகின்ற பேதை யானேன்
வித்தேறு விளைவேறி மகிழ்கின் றோர்போன்
மேலேறி யன்பரெலாம் விளங்கு கின்றா
ரொத்தேறி யுயிர்க்குயிராய் நிறைந்த வெங்க
ளுடையானே யிதுதகுமோ வுணர்கி லேனே. (௭௨)

மதியணிந்த முடிக்கனியே மணியே யெல்லாம்
வல்லவருட் குருவேநின் மலர்த்தாள் வாழ்த்திக்
கதியணிந்தா ரன்பரெலா மடியே னொன்றுங்
கண்டறியேன் கருமத்தாற் கலங்கி யந்தோ
பொதியணிந்து திரிந்துழலு மேறு போலப்
பொய்யுலகிற் பொய்சுமந்து புலம்பா நின்றேன்
றதியணிந்த நின்னருளென் றனக்கு முண்டோ
வின்றெனிலிப் பாவியேன் சொல்வ தென்னே. (௭௩)

என்னரசே யென்னுயிரே யென்னை யீன்ற
வென்றாயே யென்குருவே யெளியே னிங்கே
தன்னரசே செலுத்தியெங்கு முழலா நின்ற
சஞ்சலநெஞ் சகத்தாலே தயங்கி யந்தோ
மின்னரசே பெண்ணமுதே யென்று மாதர்
வெய்யசிறு நீர்க்குழிக்கண் விழவே யெண்ணிக்
கொன்னரைசேர் கிழக்குருடன் கோல்போல் வீணே
குப்புறுகின் றேன்மயலிற் கொடிய னேனே. (௭௪)

அல்விலங்கு செழுஞ்சடார யடியா ருள்ளத்
தமர்ந்தருளுஞ் சிவகுருவே யடியே னிங்கே
யில்விலங்கு மடந்தையென்றே யெந்தா யந்த
விருப்புவிலங் கினையொழித்து மென்னே பின்னு
மல்விலங்கு பாவையர்தம் மாசை யென்னும்
வல்விலங்கு பூண்டந்தோ மயங்கி நின்றேன்
புல்விலங்கு மிதுசெய்யா வோகோ விந்தப்
புலைநாயேன் பிழைபொறுக்கிற் புதிதே யன்றே. (௭௫)

வன்கொடுமை மலநீக்கி யடியார் தம்மை
வாழ்விக்குங் குருவேநின் மலர்த்தா ளென்னை
முன்கொடுசென் றிடுமடியேன் றன்னை யிந்த
மூடமன மிவ்வுலக முயற்சி நாடிப்
பின்கொடுசென் றலைத் திழுக்கு தந்தோ நாயேன்
பேய்பிடித்த பித்தனைப்போற் பிதற்று கின்றே
னென்கொடுமை யென்பாவ மெந்தா யெந்தா
யென்றுரைப்பே னெங்குறுவே னென்செய் வேனே. ()

உய்குவித்து மெய்யடியார் தம்மை யெல்லா
முண்மைநிலை பெறவருளு முடையா யிங்கே
மைகுவித்த நெடுங்கண்ணார் மயக்கி லாழ்ந்து
வருந்துகின்றே னல்லாலுன் மலர்த்தா ளெண்ணிக்
கைகுவித்துக் கண்களினீர் பொழிந்து நானோர்
கணமேனுங் கருதினைக் கலந்த துண்டோ
செய்குவித்துக் கொள்ளுதியோ கொள்கி லாயோ
திருவுளத்தை யறியேனென் செய்கு வேனே. (௭௯)

அருள்வெளியி லானந்த வடிவி னானின்
றாடுகின்ற பெருவாழ்வே யரசே யிந்த
மருள்வலையி லகப்பட்ட மனத்தா லந்தோ
மதிகலங்கி மெய்ந்நிலைக்கோர் வழிகா ணாதே
யிருணெறியிற் கோலிழந்த குருட்டு மன்போ
லெண்ணுதெல் லாமெண்ணி யேங்கி யேங்கி
யுருள்சகடக் கால்போலுஞ் சுழலா நின்றே
னுய்யும்வகை யறியேனிவ் வொதிய னேனே. (௮0)

கற்றவளை தனக்குமுனை வளிக்கு முன்றன்
கருணைநிலை தனையறியேன் கடையே னிங்கே
யெற்றவளை யெறும்பேபோற் றிரிந்து நாளு
மிளைத்துநின தருள்காணு தெந்தா யந்தோ
பெற்றவளைக் காணாத பிள்ளை போலப்
பேதுறுகின் றேன்செய்யும் பிழையை நோக்கி
யிற்றவளைக் கேள்விடல்போல் விடுதி யேல்யா
னென்செய்வே னெங்குறுவே னென்சொல் வேனே. ()

அடிமைசெயப் புகுந்திடுமெம் போல்வார் குற்ற
மாயிரமும் பொறுத்தருளு மரசே நாயேன்
கொடுமைசெயு மனத்தாலே வருந்தி யந்தோ
குரங்கின்கை மாலையெனக் குலையா நின்றேன்
கடுமைசெயப் பிறர்துணிந்தா லடிமை தன்னைக்
கண்டிருத்த லழகன்றே கருணைக் கெந்தாய்
செடிமையுளப் பாதகனே னென்செய் வேனின்
திருவுளத்தை யறிந்திலேன் றிகைக்கின் றேனே. (௮௨)

கூம்பாத மெய்ந்நெறியோ ருளத்தே யென்றுங்
குறையாத வின்பளிக்குங் குருவே யாசைத்
தாம்பாலே யாப்புண்டு வருந்தி நாயேன்
றையலார் மையலெனுஞ் சலதி யாழ்ந்தே
யோம்பாம லுமர்க்கிருண் டுயங்கு கின்றே
னுன்னடிய ரக்கரைமே லுவந்து நின்றே
தீம்பாலுஞ் சருக்கரையுந் தேனு நெய்யுந்
தேக்குகின்றா ரிதுதகுமோ தேவ தேவே. (௮௩)

வெள்ளமணி சடைக்கனியே மூல மாகி
விரிந்தருளு மொருதனியே விழல னேனைக்
கள்ளமனக் குரங்காட்டு மாட்ட மெல்லாங்
கண்டிருந்து மிரங்கிலையேற் கவலை யாலே
யுள்ளமெலிந் துழல்கின்ற சிறியேன் பின்ன
ருய்யும்வகை யெவ்வகையி தென்னுந் தோறும்
பொன்னெனமெய் வியர்க்கவுளம் பதைக்கச் சோபம்
பொங்கிவழி கின்றதுநான் பொறுக்கி லேனே. (௮௪)

எனையறியாப் பருவத்தே யாண்டு கொண்ட
வென்னரசே யென்குருவே யிறையே யின்று
மனையறியாப் பிழைகருது மகிழ்நன் போல
மதியறியேன் செய்பிழையை மனத்துட் கொண்டே
தனையறியா முகத்தவர்போ லிருந்தா யெந்தாய்
தடங்கருணைப் பெருங்கடற்குத் தகுமோ கண்டா
யனையறியாச் சிறுகுழவி யாகி யிங்கே
யடிநாயே னரற்றுகின்றே னந்தோ வந்தோ. (௮௫)

தீவினைநல் வினையெனும்வன் கயிற்றா லிந்தச்
சீவர்களை யாட்டுகின்ற தேவே நாயே
னேவினைநேர் கண்மடவார் மையற் பேயா
லிடருழந்துஞ் சலிப்பின்றி யென்னே யின்னு
நாவினையென் பால்வருந்திக் கறண்டு கின்ற
நாய்க்குநகை தோன்றநின்று நயக்கின் றேனு
னாவினைவிட் டெருதுகறந் திடுவான் செல்லு
மறிவிலிக்கு மறிவிலியே னான வாறே. (௮௬)

எம்பெருமா னின்விளையாட் டென்சொல் கேளு
னேதுமறி யாச்சிறியே னெனைத்தா னிங்கே
செம்புனலாற் குழைத்தபுலாற் சுவர்சூழ் பொத்தைச்
சிறுவீட்டி லிருட்டறையிற் சிறைசெய் தந்தோ
கட்பமுறப் பசித்தழலுங் கொளுந்த வந்தக்
கரணமுதற் பொறிபுலப்பேய் கவர்ந்து சூழ்ந்து
வம்பியற்றக் காமாதி யாட்ட மெல்லா
மடிபிடித்து வருத்தவென்றோ வளர்த்தா யெந்தாய். (௮௭)

அம்பரத்தே யானந்த வடிவா லென்று
மாடுகின்ற மாமணியே யரசே நாயே
னிம்பரத்த மெனுமுலக நடையி னந்தோ
விடருழந்தேன் பன்னெறியி லலையி ழுத்தே
பம்பரத்தி னுடியலைப் படுத்து மிந்தப்
பாவிமன மெனக்குவயப் படுவ தில்லை
கொம்பரற்ற விளங்கொடிபோற் றளர்ந்தே னென்னைக்
குறிக்கொள்ளக் கருதுதியோ குறித்தி டாயோ. (௮௮)

கண்ணுடைய நுதற்கரும்பே மன்றி லாடு
காரணகா ரியங்கடந்த கடவு ளேநின்
றன்னுடைய மலரடிக்கோர் சிறிது மன்பு
சார்ந்தேனோ செம்மரம்போற் றணித்த நெஞ்சேன்
பெண்ணுடைய மயலாலே சுழல்கின் றேனென்
பேதைமையை யென்புகல்வேன் பேய னேனைப்
புண்ணுடைய புழுவிரும்பும் புள்ளென் கேனோ
புலைவிழைந்து நிலைவெறுத்தேன் புலைய னேனே. (௮௯)

பொன்னுடையா ரிடம்புகவோ வவர்கட் கேற்கப்
பொய்ம்மொழிகள் புகன்றிடவோ பொருபோ விந்தக்
கொன்னுடையா வுடல்பருக்கப் பசிக்குச் சோறு
கொடுக்கவோ குளிர்க்காடை கொளவோ வஞ்ச
மின்னிடையார் முடைச்சிறுநீர்க் குழிக்க ணந்தோ
வீழ்ந்திடவோ தாழ்ந்திளைத்து விழிக்க வோதா
னென்னுடையா யென்னுடையா யென்னை யிங்கே
யெடுத்துவளர்த் தனையறியே னென்சொல் வேனே. ()

வருகணத்து வாழ்ந்திடுமோ விழுமோ விந்த
மலக்கூடென் றறிஞரெலாம் வருந்தக் கேட்டு
மருகணைத்துக் கொளப்பெண்பே யெங்கே மேட்டுக்
கடைத்திடவெண் சோறெங்கே யாடை யெங்கே
யிருகணுக்கு வியப்பெங்கே வசதி யான
விடமெங்கே யென்றுதிரிந் திளைத்தே னல்லா
லொருகணத்து முனைநினைந்த துண்டோ வென்னை
யுடையானே யெவ்வகைநா னுய்யு மாறே. (௯௧)

பொன்மலையோ வெறிதெனப்பே ராசை பொங்கிப்
புவிநடையிற் பற்பலகாற் போந்து போந்து
நென்மலையோ நிதிமலையோ வென்று தேடி
நிலைகுலைந்த தன்றியுனை நினைந்து நேடி
மன்மலையோ மாமணியோ மருந்தோ வென்று
வழுத்தியதே யில்லையிந்த வஞ்ச நெஞ்சங்
கன்மலையோ விரும்போசெம் மரமோ பாறைக்
கருங்கல்லோ பராய்முருட்டுக் கட்டை யேயோ. (௯௨)

தம்மைமறுத் தருளமுத முண்டு தேக்குந்
தகையுடையா ரிருக்கூட்டஞ் சார்ந்து நாயேன்
வெம்மையெலாந் தவிர்ந்துமனங் குளிரக் கேள்வி
விருந்தருந்தி மெய்யறிவாம் வீட்டி லென்றுஞ்
செம்மையெலாந் தருமௌன வணைமேற் கொண்டு
செறியிரவு பகலொன்றுந் தெரியா வண்ண
மிம்மையிலே யெம்மையிறுங் காணாச் சுத்த
வின்பநிலை யடைவேனோ வேழை யேனே. (௧௫)

அடியேனென் பிழையனைத்தும் பொறுத்தாட் கொண்ட
வருட்கடலே மன்றோங்கு மாசே யிந்நாள்
கொடியனேன் செய்பிழையைத் திருவுள் ளத்தே
கொள்ளுதியோ கொண்டுகுலங் குறிப்ப துண்டோ
நெடியனோ முதற்கடவுட் சமுகத் தோர்தந்
நெடும்பிழைக ளாயிரமும் பொறுத்து மாயை
யொடியநேர் நின்றபெருங் கருணை வள்ள
லெனமறைக ளோதுவதிங் குனைத்தா னன்றே. (௧௬)

கண்மயக்கும் பேரிருட்டுக் கங்குற் போதிற்
கருத்தறியாச் சிறுவனையோர் கடுங்கா னத்தே
யுண்மயக்கங் கொளவிடுத்தே யொருவன் பின்போ
யொருதாய்போன் மாயையிரு ளோங்கும் போதின்
மண்மயக்கம் பெறும்விடயக் காட்டி லந்தோ
மதியிலேன் மாழாந்து மயங்க நீதான்
வண்மையுற்ற நியதியின்பி னென்னை விட்டே
மறைந்தனையே பரமேசின் வண்மை யென்னே. (௧௭)

நற்றாயும் பிழைகுறிக்கக் கண்டோ மிந்த
நானிலத்தே மற்றவர்யார் நாடார் வீணே
பற்றாயு மவர்தமைநாம் பற்றோம் பற்றிற்
பற்றாத பற்றுடையார் பற்றி யுள்ளே
யுற்றாயுஞ் சிவபெருமான் கருணை யொன்றே
யுறுபிழைக ளெத்துணையும் பொறுப்ப தென்றுன்
பொற்றாளை விரும்பியது மன்று ளாடும்
பொருளேயென் பிழையனைத்தும் பொறுக்க வன்றே. ()

எண்ணியநம் மெண்ணமெலா முடிப்பான் மன்று
ளெம்பெருமா னென்றுமகிழ்ந் திறுமாந் திங்கே
நண்ணியமற் றையர்தம்மை யுறுமை பேசி
நன்குமதி யா திருந்த நாயி னேனைத்
தண்ணியநல் லருட்கடலே மன்றி லின்பத்
தாண்டவஞ்செய் கின்றபெருந் தகையே யெங்கள்
புண்ணியனே பிழைகுறித்து விடுத்தி யாயிற்
பொய்யனே னெங்குற்றேன் புரிவே னந்தோ. (௧௯)

அன்பர்திரு வுளங்கோயி லாகக் கொண்டே
யற்புதச்சிற் சபையோங்கு மாசே யிங்கு
வன்பரிடைச் சிறியேனை மயங்க வைத்து
மறைந்தனையே யானந்த வடிவோய் நின்னை
துன்பவடி வுடைப் பிறரிற் பிரித்துமேலோர்
துரியவடி வினனென்று சொன்ன வெல்லா
மின்பவடி வடைந்தன்றோ வெந்தா யந்தோ
வென்னளவென் சொல்கேனிவ் வேழை யேனே. (௯௮)

புற்றோங்கு மரவமெல்லாம் பணியாக் கொண்டு
பொன்மேனி தனிலணிந்த பொருளே மாயை
யுற்றோங்கு வஞ்சமனக் கள்வ னேனை
யுளங்கொண்டு பணிகொள்வ துனக்கே பொக்கு
மற்றோங்கு மவரெல்லாம் பெருமை வேண்டும்
வன்மனத்த ரெனைவேண்டார் வள்ள லேநான்
கற்றோங்கு மறிவறியேன் பலவாச் சொல்லுங்
கருத்தறியே னெனக்கருளக் கருது வாயே. (௯௯)

அருளுடைய பரம்பொருளே மன்றி லாடு
மானந்தப் பெருவாழ்வே யன்பு ளோர்தந்
தெருளுடைய வுளமுழுதுங் கோயில் கொண்ட
சிவமேமெய் யறிவுருவாந் தெய்வ மேயிம்
மருளுடைய மனப்பேதை நாயி னேன்செய்
வன்பிழையைச் சிறிதேனு மதித்தி யாயி
லிருளுடைய பவக்கடல்விட் டேறே னென்னை
யேற்றுவதற் கெண்ணுகவென் னின்பத் தேனே. (௧௦௦)

மஹாதேவமாலை முற்றிற்று.

உ

கணபதிதுணை.

திருச்சிற்றம்பலம்.

நடேசர் கொம்மி.

பல்லவி.

கொம்மியடிப்பெண்கள் கொம்மியடி - இரு
கொங்கைகுலுங்கவே கொம்மியடி.

அநுபல்லவி.

நம்மையாளும்பொன்னம்பலவாணனை
நாடிக்கொம்மியடியுங்கடி - பதம் - பாடிக்கொம்மியடியுங்கடி.

சரணங்கள்.

காமமகற்றியதூயனடி - சிவ
காமசவுந்தரிநேயனடி
மாமறையோதுசெவ்வாயனடி - மணி
மன்றெனுஞானவாகாயனடி. (௧)

ஆநந்தத்தாண்டவராஜனடி - நமை
யாட்கொண்டருளியதேஜனடி
வானந்தமாமலைமங்கைமகிழ் - வடி
வாளனடி மணவாளனடி. (௨)

கல்லைக்கனிவிக்குஞ்சித்தனடி - முடி
கங்கைக்கருளியகர்த்தனடி
தில்லைச்சிதம்பரசித்தனடி - தேவ
சிங்கமடியுயர்தங்கமடி. (௩)

பெண்ணொருபால்வைத்தமத்தனடி - சிறு
பிள்ளைக்கறிகொண்டபித்தனடி
நன்மைநமக்கருளத்தனடி - மிக
நல்லனடியெல்லாம்வல்லனடி. (௪)

அம்பலத்தாடல்செய்யனடி - யன்ப
ரன்புக்கெளிதருமெய்யனடி
தும்பைமுடிக்கணிதூயனடி - சயஞ்
சோதியடிபரஞ்சோதியடி. (௫)

சிவமயம்.

மஹாதேவமாலையின்

செய்யுள் முதற்குறிப் பகராதி.

மஹாதேவமாலையின்
செய்யுள் முதற்குறிப் பகராதி முற்றிற்று.

மதராஸ் ரிப்பன் புஸ்தகசாலை,
91, தம்புசெட்டி வீதி, சென்னை.

திருவாசகம் [மாணிக்கவாசக சுவாமிகள் ஆப்டோன் படத்துடன்] (இப்பதிப்பில், செய்யுள்கள் வாசிக்கும்போதே கூடியமட்டும் பொருள் விளங்கும்படி சந்தங் கெடாத வண்ணம் சந்தி பிரிக்கப்பெற்று பைகா (பெரிய) எழுத்தில் அச்சிடப்பட்டுள்ளன. மாணிக்கவாசக சுவாமிகள் சரித்திரமும் காலவரையறையுடன் நூதனமாய் எழுதிச் சேர்க்கப்பட்டுள்ளது) ...	1	0	0
பட்டினத்துப் பிள்ளையார் பாடல் முற்றும், புராண முற்றும், பத்திரகிரியார் புலம்பல் முற்றும் [நூதனமாய் எழுதப்பட்ட இருவர்களுடைய சரித்திரங்களும்]...	1	0	0
நைடதம் மூலமும் உரையும் (புதிய பதிப்பு) 27-லிதகிராப் படங்களும், ஒரு உயர்ந்த ஆப்டோன் படமும் ...	2	0	0
விநோதரசமஞ்சரி (புதிய பதிப்பு) கிலிட்டு பயிண்டு ...	1	2	0
கைவல்லியம் (ஸ்ரீலஸ்ரீ பொன்னம்பல சுவாமிகளியற்றிய தத்துவார்த்ததீபமென்னும் உரையுடன்) ...	2	0	0
இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம்: (உபநிஷத்துக்கள் முதலிய இந்துமதத்தின் உண்மைகள்) ...	1	12	0
தாயுமானவர் பாடல் (அரும்பதக் குறிப்புடன்) சுவாமிகள் படத்துடன் (உயர்ந்த கிலிட்டு பயிண்டு) ...	1	0	0
அறப்பளீசுரசதகம் மூலமும் உரையும்	0	10	0
அறப்பளீசுரசதகம் மூலம்	0	2	0
குமரேசசதகம் மூலம்	0	2	0
திருவேங்கடசதகம் மூலம்	0	2	0
தண்டலையார்சதகம் மூலம்	0	1	0
கோவிந்தசதகம்	0	0	9
எம்பிரான்சதகம்	0	1	0
சிவசங்கரசதகம்	0	0	9
டை ஏழுசதகமும் ஒரே கட்டடமாகிய சதகத்திரட்டு ...	0	9	0
அண்ணாமலைச்சதகம்	0	2	0
குசேலோபாக்யானம் மூலம், பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை (28-படங்களுடன்)	3	0	0
மேற்படி மூலம் (அரும்பதப் பொருளுடன்) ...	0	6	0
திராவிட பூர்வகாலக் கதைகள்	0	8	0
திராவிட மத்தியகாலக் கதைகள்	0	8	0
தானவன் என்னும் போலீஸ் நிபுணன் கண்டுபிடித்த அற்புதக் குற்றங்கள்	1	0	0
ஸ்ரீ விருத்திப்பிரபாகரம் (வேதாந்த நூல்)	4	0	0
பஞ்சதசப் பிரகரணம் (வினாவிடை)	1	0	0
பக்தலீலாம்ருத வசனம் (82-பக்தர்களின் சரித்திரம்) ...	3	0	0
பிரபோத சந்திரோதய வசனம்	1	0	0
பிரபுலிங்கலீலை வசனம்	0	12	0
குமாரதேவர் (மகாராஜா துறவு முதலிய) 16-சாஸ்திரம்	0	10	0
சோணத்திக் கலம்பகம்	0	2	0